# மலேசியாவில் புகுமுக வகுப்புகளை பற்றிய ஆராய்ச்சி:

## அவற்றின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கான ஓர் ஆய்வு

# ஆய்வு சுருக்கம்


EWRF

Educational, Welfare & Research Foundation Malaysia
(Yayasan Pelajaran, Kebajikan, & Penyelidikan Malaysia)



ஏப்ரில் 2012

மலேசியாவில் புகுமுக வகுப்புகளை பற்றிய ஆராய்ச்சி:
அவற்றின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கான ஓர் ஆய்வு

பேராசிரியர் முனைவர் N.S. ராஜேந்திரன்
முனைவர் ரமேஷ் ராவ்
திருமதி சாந்தி பெரியசாமி
முனைவர் மகேந்திரன் மணியம்
முனைவர் கார்தியாயினி தேவராஜு
திருமதி ஜெயா வேலு

# ஆய்வு சுருக்கம்

EWRF
Educational, Welfare &
Research Foundation

ஏப்ரில் 2012

# மலேசியாவில் புகுமுக வகுப்புகளை பற்றிய ஆராய்ச்சி: அவற்றின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கான ஓர் ஆய்வு

## 1.0 கண்ணோட்டம்

புகுமுக வகுப்பு பற்றிய பிரச்சனைகள் எப்போதுமே ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுவாக சமூகத்தினரிடையே கவலை ஏற்படுத்தும் ஒரு விஷயமாகவே இருந்து வருகிறது. புகுமுக வகுப்பு வட்டாரமொழிப் பள்ளிக்கூடத்தை சேர்ந்த மலாய், சீன மற்றும் தமிழ் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்கள் இடைநிலைப் பள்ளிகளில் காலெடுத்து வைப்பதற்கு முன் தங்கள் மொழி மற்றும் தொடர்பாடல் திறன்களை வளர்த்து மேம்படுத்திக் கொள்வதற்கான ஒரு தளத்தை வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்டன (கல்விச் சட்டம் 1996).

இன்றைய சூழ்நிலையில், புகுமுக வகுப்புடன் தொடர்புள்ள பல்வேறு சாராரிடமிருந்து நிறைய மனக்குறைகளும் அதிருப்தியும் எழுந்துள்ளதாகத் தெரிகிறது. அடிப்படையில், UPSR தேர்வில் மொழிப்பாடங்களில் நன்கு தேர்ச்சி பெறும் மாணவர்கள் மட்டுமே 1-ஆம் படிவ நிலைக்கு முன்னேற அனுமதிக்கப்படுகிறார்கள். அதே வேளையில், மொழிப் பாடங்களில் வலுவில்லாமல் உள்ளவர்கள் புகுமுக வகுப்பில் தக்கவைக்கப்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலையால் வேறுபல பிரச்சனைகளும் எழுகின்றன. முதலாவதாக, மொழித் திறன் குறைவாக உள்ள ஒரே காரணத்தால் புகுமுக வகுப்பில் தக்கவைக்கப்படும் மாணவர்கள், 1 ஆம் படிவ நிலைக்கு முன்னேறிச் செல்ல இயலும் மாணவர்களை விட பள்ளிப்படிப்பு தர ரீதியாக குறைந்த திறன் பெற்றவர்கள் போல காட்டப்படுகிறார்கள். எனினும் பள்ளிப்படிப்பில் சிறந்து விளங்குவதற்கான அளவுகோலில் ஒரு பகுதியான அறிவியல், கணிதம் போன்ற பிற பாடங்களில் அவர்கள் நன்கு தேர்ச்சி பெற்றிருக்கலாம். இது, மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகிறது.

குறிபிட்ட அளவிற்கு, இந்தக் மாணவர்கள் "திறமையற்றவர்கள்" எனப் பெயர் பெற்றுவிடுவதால் இந்த அவமதிப்பு அவர்களின் ஊக்கத்தை வெகுவாக பாதிக்கலாம். இரண்டாவதாக, உண்மையில் எல்லா பாடங்களிலும் தேர்ச்சி குறைந்தவர்களாக உள்ள மாணவர்கள், பள்ளிப்படிப்பில் சிறந்துவிளங்க ஆர்வமோ ஊக்கமோ இல்லாத மாணவர்களோடு ஒரு வருடகாலம் சேர்ந்து இருக்கும் சூழ்நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். இதனால், அம்மாணவர்கள் பள்ளிப்படிப்பை விட சமீப காலமாக அதிகரித்துக்கொண்டு வருகின்ற சமூக சீர்கேடுகலில் தங்களின் கவனத்தை திசை திருப்புகின்றனர். அத்தகையச் செயல்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவது அவர்களை நெறிபிறழும் இளையோர்களாகவோ இடைநிற்றல் மாணவர்களாகவும் ஆக்கிவிடுகிறது. இது எவ்வாறாயினும், புகுமுக வகுப்புகள் அறிமுகமானபோது கொள்கை இயற்றுபவர்களால் முன்வைக்கப்பட்ட குறிக்கோள்களுடன் முரண்படுகிறது.

எனவே புகுமுக வகுப்பு குறித்த ஆழமான செயலறிவு சார்ந்த ஆராய்ச்சிக்கு அவசியம் உள்ளது. புகுமுக வகுப்பின் செயல்திறன் மற்றும் சமகாலப் பயனை மதிப்பீடு செய்வதற்கும் அவசியமான மாற்றங்களை மேற்கொள்ளுமாறு முன்மொழிவதற்கும் இத்தகைய ஆய்வு அவசியம் எனத் தோன்றுகிறது.

## 2.0 சுருக்கக்குறிப்பு

'மலேசியாவில் புகுமுக வகுப்புகளை பற்றிய ஆரய்ச்சி: அவற்றின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கான ஓர் ஆய்வு' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஆய்வு, மலேசிய கல்வி அமைப்பில் புகுமுக வகுப்புகளின் செயல்திறன் குறித்து தீர ஆராய்கிறது. தர மற்றும் அளவு ரீதியான அணுகுமுறைகள் சேர்ந்த ஒரு கலவை முறைமை இந்த ஆய்வில் பிரயோகிக்கப்பட்டது. இந்த ஆய்விற்கான மாதிரி, தேர்ந்தெடுக்கப்பட்ட புகுமுக வகுப்பு மாணவர்கள், புகுமுக வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகிகள், பெற்றோர்கள், அரசியல் தலைவர்கள், அரசு சாரா (NGO) பிரதிநிதிகள், கல்வி ஸ்தாபனங்கள் மற்றும் ஊடகமாகும். மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகிகள், அரசியல் தலைவர்கள், ஊடகப் பிரதிநிதிகள், கல்வி ஸ்தாபனங்கள் மற்றும் அரசு சாரா (NGO) பிரதிநிதிகள் உள்ளடக்கிய 54 நேர்காணல்கள் நடத்தப்பட்டது. 414 மாணவர்கள், 40 ஆசிரியர்கள் மற்றும் 94 பெற்றோர்களுக்கு அளிக்கப்பட்ட 548 கேள்வித்தாள்களில் இருந்து அளவு ரீதியான தரவு சேகரிக்கப்பட்டது. கருத்துக் கோரப்பட்ட வினாப் பட்டியல் தொகுப்புகளுக்குக் கிடைத்த குரோன்பேக் ஆல்ஃபா (Cronbach Alpha) மதிப்பெண்கள் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு முறையே 0.66, 0.30 மற்றும் 0.77 ஆகும். இந்த வகுப்புகளை அமுல்படுத்துவதில் உள்ள பலவீனங்களாலும், பாடத்திட்டத்தில் உள்ள முக்கிய பாடங்களான கணிதம், அறிவியல் போன்றவற்றுக்கு போதிய கவனக்குவிப்பு வழங்காததாலும் புகுமுக வகுப்பின் கொள்கைக் குறிக்கோள்கள் அடையப்படவில்லை என்பது இந்த ஆய்வின் முக்கிய முடிவுளாகும். புகுமுக வகுப்பின் நலப்பாடுடையோரும் அவ்வகுப்பை நீக்குவது, மருபரிசீலனை செய்வது மற்றும் புதுபிப்பது பற்றி தங்கள் கருத்தை தெரிவித்து உள்ளனர். இந்த ஆய்வின் முடிவுகளிலிருந்து, புகுமுக வகுப்பு ரத்து செய்யப்பட வேண்டிய அவசியம் உள்ளது; ஏனெனில், தமிழ் பள்ளிக்கூட மாணவர்கள் மத்தியில் மலாய் மொழி எழுத்தறிவு மட்டத்தை மேம்படுத்துவதில் அது செயல்திறன் கொண்டதல்ல எனக் கண்டறியப்பட்டுள்ளது என்பது தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தமிழ் பள்ளிக்கூடங்களில் தொடக்கக் கல்வியில் மலாய் மொழி கற்பித்தல் மற்றும் கற்றல் மறுபரிசீலனை செய்து மேம்படுத்தப்பட்டு மாணவர்கள் தொடக்கப் பள்ளியை விட்டுச்செல்வதற்கு முன் அடிப்படை எழுத்தறிவு பெற்றிருப்பதை உறுதிசெய்யவேண்டும் என இந்த ஆய்வு வலியுறுத்துகிறது.

## 3.0 ஆராய்ச்சி கேள்விகள்

ஆய்வுக்கான ஆராய்ச்சி கேள்விகள் பின்வருமாறு:

3.1 புகுமுக வகுப்புகள் எந்த அளவுக்கு விரும்பத்தக்க பலன்களைத் தருகின்றன?

3.2 புகுமுக வகுப்புகளில் எந்த அளவுக்கு வளங்கள் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாட்டுக்கு வசதியேற்படுத்தித் தருகின்றன?

3.3 புகுமுக வகுப்புகள் மீது பல்வேறு நலப்பாடுடையோரின் எதிர்பார்ப்புகள் என்ன?

## 4.0 ஆராய்ச்சி வடிவமைப்பு

இந்த ஆய்வில் தர மற்றும் அளவு ரீதியான அணுகுமுறைகள் சேர்ந்த ஒரு கலவை முறைமை பிரயோகிக்கப்பட்டது. இந்த ஆய்வின் முடிவுகளை வலுப்படுத்த கலவை அணுகல் முறை பிரயோகிக்கப்பட்டது. இது, பல்வேறு ஆதாரங்களிலிருந்து வரும் தர ரீதியான தரவை ஒன்றுசேர்த்து அதன் மூலம், அளவு ரீதியான தரவுக்கு ஆதரவாக, உருவாகிவரும் போக்குகள் மற்றும் முறைகளை கண்டறிய உதவியது. ஒன்றுடன் ஒன்றை ஈடுசெய்ய, அளவு ரீதியான மற்றும் தர ரீதியான தரவு பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

## 5.0 முடிவுகளின் தொகுப்புரை

இடைநிலைப் பள்ளிகளில் புகுமுக வகுப்பு இன்றும் பயனுள்ளதா மற்றும் அது தொடர்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமா என்பதை தீர ஆராய்வதற்கு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த வகுப்புகளில் படிப்பவர்கள் தங்கள் ஆசிரியர்களிடம் கற்றுக்கொள்வது குறித்து மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் எனவும் இந்த வகுப்புகளிலிருந்து அவர்கள் பயனடைகிறார்கள் என்பதைக்காட்டும் வகையில் தரவு உள்ளதாகத் தெரிகிறபோதிலும், மறுபுறம், இந்த வகுப்புகளின் நிலைமை குறித்தும் இந்த வகுப்புகள் பள்ளிக்கூடங்களில் செயல்படுத்தப்படும் முறை குறித்தும் ஏராளமான பிரச்சனைகள் எழுப்பப்பட்டுள்ளன. இந்த வகுப்புகள் தொடர்வது குறித்து உடன்பாடு உள்ளவர்கள் கூட, இவற்றின் நிலைமை, பாடத்திட்டம், பாடப்புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பான ஒரு முழுமையான மீளாய்வு வேண்டும் என ஆலோசனை அளித்துள்ளனர். உண்மையில், இடைநிலைப் பள்ளிகளில் இந்த வகுப்புகள் ஒருங்கமைத்து நடத்தப்படும் முறை பற்றி அவர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர். மேலும், பள்ளிக்கூடைத்தின் இயல்பான கல்வி வழக்கிலிருந்து பிரிக்கப்பட்ட இம்மாணவர்கள் மீது இந்த வகுப்புகள் ஏற்படுத்தும் எதிர்மறை விளைவுகளையும் அவர்கள் தெளிவாக இனங்கண்டு, இந்தப் பிரச்சனைகளுக்கு ஒரு பகுத்தறிவு நோக்குடன் வல்லுனர்களால் தீர்வளிக்கப்படவேண்டும் என ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இந்த ஆய்வு மூலம், வட்டாரமொழிப் பள்ளிகளில் ஆரம்பத்திலிருந்தே அனைத்து மாணவர்களுக்கும் புகுமுக வகுப்பு கட்டாயமாக இருந்தது தெரியவந்துள்ளது. இந்த வகுப்புகள், மலாய் மொழி மற்றும் ஆங்கிலத்தில் புலமை பெறுவதற்காக மாணவர்களுக்கு கூடுதலாக ஓராண்டு கால அவகாசத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டன.

எனினும், இந்த விதிக்கு பல்வேறு சாதக மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, பெரும்பாலான மாணவர்கள் இந்த புகுமுக வகுப்புகளுக்கு செல்லாமல் தவிர்ந்திருப்பதற்கும் அவை வசதியளித்துள்ளதாகத் தெரிகிறது. இதனால், வட்டாரமொழிப் பள்ளி மாணவர்களில் ஒரு சிறு கூட்டத்தினரே இடைநிலைப் பள்ளிகளில் இந்த வகுப்புகளில் படிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் தங்கள் UPSR தேர்வில் மலாய் மொழி பாடத்தில் குறைந்தபட்சம் 'சி' தரமதிப்பு பெறாத மாணவர்கள் அந்தப் பள்ளிக்கூடங்கள் நடத்தும் சிறப்புத் தேர்வுகளை எழுதிய பின் பள்ளி முதல்வர்களின் அங்கீகாரத்துடன் 1 ஆம் படிவநிலைக்கு அவர்கள் முன்னேற அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் இருக்கத்தான் செய்கின்றன. துரதிர்ஷ்டவசமாக, பள்ளி முதல்வர்களுக்கு வழிகாட்டுதல்கள் ஏதும் வழங்கப்படவில்லை எனத் தெரிகிறது. எனவே, அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து பயனடையும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது.

மொத்தத்தில், இந்த வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு மென்மேலும் அதிகமான நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. இதை நலப்பாடுடையோர் வரவேற்றுள்ளனர். உண்மையில், இந்த வகுப்புகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும் என்பதே நலப்பாடுடையோரின் எதிர்பார்ப்பு.

பல சந்தர்ப்பங்களில் மற்ற எல்லா பாடங்களிலும் 'ஏ' மற்றும் 'பி' தரமதிப்புகள் பெற்றுத் தேறி மலாய் மொழி பாடத்தில் மட்டும் குறைந்தபட்ச 'சி' தரநிலையை பெறத் தவறிய மாணவர்கள் புகுமுக வகுப்புகளில் படிக்க அனுப்பப்படுகிறார்கள் என்பதாக, இந்த ஆய்வுக்காக திரட்டப்பட்ட தரவின் பகுப்பாய்விலிருந்து கண்டறியப்பட்டது. எனினும், இது தொடர்பாக சில கேள்விகள் எழுகின்றன, ஏன் இந்த மாணவர்கள் மற்ற பாடங்களில் நல்ல தரமதிப்புகளை பெறமுடிகிற அதேவேளையில் மலாய் மொழி பாடத்தில் அவ்வாறு பெறுவதில்லை? ஏன், அவர்கள் அசலில் மற்ற பாடங்களில் நல்ல தரமதிப்புகளைப் பெற்று மலாய் மொழி பாடத்தில் மட்டும் குறைந்தபட்ச 'சி' தரமதிப்பு பெறத் தவறிவிடுகிறபோது புகுமுக வகுப்பில் படிக்கவேண்டும் என விதிக்கப்படுகிறார்கள்? எனினும், தேசியப் பள்ளிக்கூட மாணவர்கள் விஷயத்தில் இவ்வாறு இருப்பதில்லையே, அவர்கள் UPSR தேர்வில் பெற்ற தரமதிப்புகள் கணக்கிலெடுக்கப்படாமல் ஒவ்வொரு மாணவரும் 1 ஆம் படிவநிலைக்கு முன்னேற அனுமதிக்கப்படுகின்றனரே, அது ஏன்?

ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட பல மாணவர்கள் தங்கள் தொடக்கப்பள்ளி வகுப்பு நண்பர்களுடன் சேர்ந்திருக்க விரும்பி ஓராண்டுகால தாமதத்தை தவிர்க்க முனைவதால் அவர்கள் புகுமுக வகுப்புகளுக்கு செல்லாமல் இருக்க விழைகின்றனர் என இந்த ஆய்வின் முடிவுகள் காட்டுகின்றன. இது தொடர்பாக, இந்த புகுமுக வகுப்பு மாணவர்கள் தங்கள் அரையாண்டு தேர்வுக்குப் பின், உடனடியாக 1 ஆம் படிவநிலைக்கு முன்னேற அனுமதிக்கப்பட வேண்டும் என புகுமுக வகுப்பில் கற்பிக்கும் மூன்றில் இரண்டு பகுதி ஆசிரியர்கள் ஆலோசனை அளிக்கின்றனர். புகுமுக வகுப்பிற்கு செல்லும் மாணவர்கள் வட்டாரமொழிப் பள்ளிகளைச் சேர்ந்தவர்கள் என்பதால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அந்த மாணவர்கள் ஒரே இனத்தவராக இருக்கின்றனர். ஓராண்டு காலம் அவர்கள் பள்ளிக்கூடைத்தின் இயல்பான கல்வி வழக்கிலிருந்து பிரிக்கப்பட்டு தங்களுக்கிடையில் தொடர்புகொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆக, இங்கு நிலவும் முரண்பட்ட உண்மை என்னவென்றால், அவர்கள் மலாய் மொழி மற்றும் ஆங்கிலத்தில் புலமை பெறவேண்டும் என விதிக்கப்படுகின்ற அதேவேளை, இந்த மொழிகளைப் பயன்படுத்தாமல் அதற்கு பதிலாக பெரும்பாலும் தங்கள் தாய்மொழியையே அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்தக் கருத்துச்சூழலில், புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு மத்தியில் இன ஒருமைப்பாடு குறை உள்ளதாக ஆசிரியர்கள் கருத்து அளிக்கின்றனர். கருத்துப் பரிமாற்றத்துக்கான மொழி என்ற வகையில் மலாய் மொழியின் பயன்பாடு குறைந்தபட்சமாகிவிட்டதாகத் தோன்றுகிறது. அதைத் தீவிரமாகப் பரிசீலிக்கவேண்டிய அவசியம் உள்ளது. நலப்பாடுடையோரால் கவலைக்குரிய பிரச்சனையாக எழுப்பப்படும் இன்னொரு விஷயம், புகுமுக வகுப்புகளில் படிக்கும் இந்த மாணவர்களின் சுய கோட்பாடு மற்றும் ஊக்க நிலை. இந்த மாணவர்கள் பள்ளிக்கூடைத்தின் இயல்பான கல்வி வழக்கிலிருந்து 'நீக்கப்பட்டு', 'ஊக்குவிக்கபடாத' சூழலில் நுழைக்கப்படுகிற அந்த நிலை குறித்து அவர்கள் அதிருப்தியாக உள்ளனர். அந்த மாணவர்களின் பெரும்பாலான சக மாணவர்கள் 1 ஆம் படிவநிலையில் உள்ளபோது, அவர்கள் 'நீக்கப்பட்டு' 'கல்வியில் பிந்தங்கிய' மாணவர்களுடன் சேர்க்கப்படுகின்றனர். இந்த வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள், தாங்கள் பிரிவினை மற்றும் பாரபட்சத்துக்கு

ஆளாகியுள்ளதாக உணர்வது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது போல் தெரிகிறது. நலப்பாடுடையோர் அளித்த கருத்துகளின் படி, இந்த வகுப்புகளில் கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்கள் ஊக்கம் மற்றும் ஆர்வக்குறைவாகக் காணைப்படுகின்றனர்.

இந்த இரு பாடங்களில் தேவையான அளவு புலமை பெறத் தவறிய வட்டாரமொழிப் பள்ளி மாணவர்களின் வசதிக்காகவே புகுமுக வகுப்பு உள்ளது என்றபோதிலும், இந்த வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் போதியளவு பயிற்சி பெற்றுள்ளனரா என்ற கேள்வி அடிக்கடி எழுப்பப்படுகிறது. உதாரணமாக, இந்திய மற்றும் சீன மாணவர்களுக்கு மலாய் மொழியை இரண்டாவது மொழியாகக் கற்பிக்க ஆசிரியர்கள் தயாராக உள்ளனரா? இந்தக் கருத்துச்சூழலில், கற்பித்தல் மற்றும் கற்றலை பொறுத்தவரை, நலப்பாடுடையோர் ஏறத்தாழ ஒருமித்த நிலைப்பாடு எடுத்து, புகுமுக வகுப்புகளில் மலாய் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் தாய்மொழியில் உரையாடக் கூடியவர்களாக இருக்கவேண்டும் எனக் கூறியுள்ளனர்.

குறிப்பிட்ட அம்சங்களில் சிறப்பு கவனமும் வழிகாட்டுதலும் வழங்கப்பட வேண்டிய இந்த மாணவர்களுக்குக் கற்பிக்கும் வகையில் புகுமுக வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளனரா என்ற கேள்வியும் இங்கு எழுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு இருப்பதில்லை என்றே தோன்றுகிறது. ஆக, சிறப்பு கவனமும் வழிகாட்டுதலும் வழங்குவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டிராத ஆசிரியர்களால் எவ்வாறு, கல்வியில் பிந்தங்கியவர்கள் எனக் கருதப்படும் இந்த மாணவர்களுக்கு சிறப்பு கவனம் அளிக்கமுடியும்? ஆசிரியர்கள் உரிய அறிவாற்றலும் திறன்களும் பெற்றிருந்தாலும் கூட, இந்த வகுப்புகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை வழக்கமான வகுப்புகளில் உள்ளவர்களின் எண்ணிக்கையைப் போன்று இருந்தால் அது எவ்வாறு சாத்தியமாகும்? தேவையான நடவடிக்கைகள் செயலபடுத்தப்படாத போது, முக்கிய மாற்றங்கள் நிகழும் என எதிர்பார்ப்பது சரிதானா?

மேலும், புகுமுக வகுப்பில் பயன்படுத்தப்படும் பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் குறித்து மிகவும் அக்கறை கொண்ட பல்வேறு நலப்பாடுடையோரால் எழுப்பப்படும் முக்கிய பிரச்சனைகளும் உள்ளன. கணிதமும் அறிவியலும் மொழிப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என தெரிகிறபோதிலும், ஓராண்டு காலம் இந்த இரு மூல பாடங்களை தெளிவாக கற்பிக்கப்படாமல் விடுவது மோசமான பிரச்சனைகளை எழுப்பியுள்ளது. இந்த ஆய்வில், ஊடகப் பிரதிநிதிகள் மற்றும் அரசியல்வாதிகள் போன்ற நலப்பாடுடையோரின் பொதுவான கருத்துகள் திரட்டப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டதிலிருந்து ஒரு பரிந்துரை முன்வைக்கப்படுகிறது. வேறுபல நடவடிக்கைகளுக்கு மத்தியில், பாடத்திட்டத்தில் அனைத்து முக்கியப் பாடங்களும் இருக்கும் விதத்திலும் பாடத்திட்ட மீளாய்வு மற்றும் மறுசீரமைப்பு செய்யவேண்டும். மேலும், பயன்படுத்தப்படும் பாடப்புத்தகங்களும் மீளாய்வு செய்யப்படவேண்டும்; ஏனெனில், அவை கூடுதல் தற்கால தன்மை கொண்டதாகவும் அதிக தொகுப்பாற்றல் மற்றும் வலுவூட்டல் பயிற்சிகள்/செயல்பாடுகள் கொண்டதாகவும் இருக்கவேண்டும் எனவும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 6.0 பரிந்துரைகள்

இந்த ஆராய்ச்சிக் குழு ஆய்வின் நோக்கத்திற்காக, பகுப்பாய்வு செய்து, விளக்கமளிக்கப்பட்ட தரவின் அடிப்படையில், பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்க விரும்புகிறது.

## 6.1 புகுமுக வகுப்புகளை படிப்படியாக அகற்றுதல்

2013 ஜனவரி முதல் புகுமுக வகுப்பு படிப்படியாக சில கட்டங்களில் அகற்றப்பட்டு, 2015 டிசம்பரில் அது முற்றிலும் ரத்துசெய்யப்பட வேண்டும். 1 ஆம் படிவநிலைக்குச் செல்ல இந்த மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். அவர்கள் பள்ளிக்கூடைத்தின் இயல்பான கல்வி வழக்கில் இருக்க அனுமதிக்கப்பட்டு, அவர்களின் சக மாணவர்களுக்கு இணையாக ஒருங்கிணைந்து மற்றும் கற்றலுக்கான சம வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும்.

மலாய் மொழி மற்றும் ஆங்கில மொழியில் அடிப்படையான அளவுக்கு புலமை பெறத் தவறுகிற இந்த மாணவர்கள், சிறப்பு வகுப்புகளில் பயிற்றுவிக்கப்பட்ட பின்பும், 1 ஆம் படிவநிலை வகுப்புகளில் பரவலாக அமர்த்தப்படவேண்டும். அங்கு உள்ள சராசரி அல்லது சிறைந்த புலமை கொண்ட மாணவர்களாக இருக்கும் தங்கள் சகாக்களுடன் உறவாடிக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு அளிக்கப்படும். அதைவிட முக்கியமாக, இதன் மூலம் அவர்கள் பன்மைக் கலாச்சார மற்றும் பன்மொழி புழக்கச் சூழலில் இருப்பார்கள். அங்கு அவர்களால் மொழியியல் மற்றும் பிற தொடர்பாடல் திறன்களை ஈர்த்துக்கொள்ள முடியும்.

புகுமுக வகுப்பு படிப்படியாக அகற்றப்படுவதற்கு ஒரு முழு அணுகுமுறையை வழங்குவதற்காக மேற்படி முக்கியப் பரிந்துரையுடன் சேர்த்து பின்வரும் நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்படுகின்றன.

## 6.2 பிரச்சனையை முடக்கி வைக்கும் திட்டங்கள்

மலாய் மொழி மற்றும் ஆங்கில மொழிகளில் அடிப்படைப் புலமை பெற தவறும் மாணவர்கள் ஆரம்பக் காலக் கட்டத்திலேயே கண்டறியப்படுவதை உறுதிசெய்வதற்குரிய நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட வேண்டும். அவர்கள் தொடக்கப் பள்ளிகளிலேயே 3-ஆம் ஆண்டு இறுதிக்குள் கண்டறியப்படவேண்டும். அவர்கள் தங்கள் தொடக்கக் கல்வியை முடிக்கும்வரை காத்திருந்து, பிறகு அவர்கள் இந்த மொழிகளில் குறைவான அடிப்படைப் புலமை கொண்டுள்ளார்கள் என உணர்ந்து அவர்களை இந்த அமைப்பிற்கு பாதிப்புக்குள்ளாக்கக்கூடாது. குறிப்பாக, தமிழ் பள்ளிக்கூடங்களில் ஆறு ஆண்டுகள் கல்வியை நிறைவுசெய்யும் 40 சதவீத மாணவர்கள் மலாய் மொழியில் குறைந்தபட்சம் 'சி' தரமதிப்பு பெறத் தவறிவிடும்போதுதான் இந்த நிலைமை. எனவே அவர்களின் குறைபாடுகள் ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால், விரைவாக பிரச்சனையை முடக்கி வைக்கும் திட்டங்களை அறிமுகப்படுத்தி, ஆறு ஆண்டுகள் கல்விக்குப் பிறகும் மலாய் மொழியில் அடிப்படைப் புலமை பெற தவறுபவர்களின் விழுக்காடு 5 சதவீதமாகக் குறைக்கலாம்.

## 6.3 வகுப்பு அளவு

இந்த மாணவர்கள் அமர்த்தப்படும் பிரச்சனையை முடக்கி வைக்கும் திட்டங்களில் வகுப்பு வாரியாக மாணவர் எண்ணிக்கை 25 க்கும் குறைவாக இருக்கவேண்டும். இதன் மூலம், இந்த மாணவர்களிடத்தில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக சிறப்பு கவனம் செலுத்துவதற்குரிய நேரமும் சந்தர்ப்பமும் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும்.

### 6.4 ஆசிரியர்களுக்கான கல்வி

பிரச்சனையை முடக்கி வைக்கும் திட்டங்களின் கீழ் வகுப்புகளில் இந்த மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, இந்த மாணவர்களின் சிறப்புத் தேவைகளுக்குத் ஈடுகொடுக்கும் விதத்தில் போதிய பயிற்சி மற்றும் நிபுணத்துவ மேம்பாட்டு பாடநெறிகளும் வழங்கப்படவேண்டும். இந்த மாணவர்களுக்கு சிறப்பு கவனமும் வழிகாட்டுதலும் வழங்குவது அவசியம். மேலும், பெரும்பாலும் தங்கள் தாய்மொழி அல்லாத மலாய் மொழி மற்றும் ஆங்கில மொழிகளைப் பேசும் இந்த மாணவர்களுக்கு இந்த மொழித் திறன்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான உத்திகள் புகட்டப்படவேண்டும். பொருத்தமான உத்திகளில், இரண்டாம் மொழி அணுகுமுறை பயன்படுத்தி மலாய் மொழி கற்பிப்பதும் அடங்கும்.

## 7.0 முடிவு

மலேசியாவில் புகுமுக வகுப்பின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கான இந்த ஆய்வு, இந்தப் பிரச்சனையை ஆழமாக தீர ஆராய்ந்து பொருத்தமான பரிந்துரைகளை அளிப்பதற்கான முதல் பெரிய முயற்சியாகும். இந்தப் பிரச்சனை நீண்டகாலமாக பல நலப்பாடுடையோருக்கு பெருங்கவலையை அளித்து வந்துள்ளது. மாணவர்களின் நீண்டகால பலனைக் கருதி படிப்படியான காலகட்டங்களில் புகுமுக வகுப்பை அகற்றுவதற்கு அமோக ஆதரவு இருப்பதாக தரவு காட்டுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தப் பரிந்துரைகளை தீவிரமாகப் பரிசீலித்து அதற்கேற்ப அவசியமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பது இந்த ஆராய்ச்சிக் குழுவின் எதிர்பார்ப்பாகும். மேலும், கல்வித் துறை உள்ளிட்ட அரசு முழுமாற்றத் திட்டத்தின் பலன்களை நாடு கண்டுவரும் இந்த சமயத்தில், தற்போதிய அமைப்பில் அவசிய மாற்றங்களைச் செய்வதும் பொருத்தமாக இருக்கும் என்பது இந்த ஆராய்ச்சிக் குழுவின் அபிப்பிராயமாகும்.